**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**OS.NO.194/2019** **தேதி.**06.03.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 06.03.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு.சரவணன் |
| க/பெ. | திரு.சுப்பிரமணி |
| வயது | 45/2026 |

துவக்க நேரம் 11.55 A.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ;

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால், 10 ம் வகுப்பு படித்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எல்லாம் எனக்கு தெரியும் என்றால், ஆமாம். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால், டிரைவர். விஜயன் என்ன தொழில் செய்கிறார் என்றால், விவசாயம். நாங்கள் இருவரும் சேர்ந்து மாதம் எவ்வளவு சம்பாதிப்போம் என்றால், விஜயன் மாதம் ரூ.30,000, ரூ.40,000/– சம்பாதிப்பார், எனக்கு மாத வருமானம் ரூ.70,000/–.

2. நாங்கள் இருவரும் சேர்ந்து வருமான வரி செலுத்துகிறோமா என்றால் இல்லை. பிரதிவாதி ஜெய்சங்கர் என்ன வேலை செய்கிறார் என்றால், தோல் கம்பெனியில் வேலை செய்கிறார், விவசாயமும் செய்கிறார். நான் எவ்வளவு ரூபாய் பணம் கொடுத்தேன் என்றால், ரூ.11,00,000/– கொடுத்தேன். இந்த ரூ.11,00,000/– பணத்தை, காசோலையாகவோ, வரையோலையாகவோ நான் கொடுக்கவில்லை என்றால், சரிதான், ரொக்கமாக கொடுத்தேன். இந்த பணத்தை ஜெய்சங்கரும் அவரது மனைவியும் வந்து வாங்கி சென்றார்கள்.

3. மேற்படி தொகையை ரொக்கமாக எந்த இடத்தில் வைத்து கொடுத்தேன் என்று கடனுறுதி சீட்டில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். ஜெய்சங்கரின் மனைவியிடம் நான் கையெழுத்து வாங்கினேனா என்றால், அவர் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளார். வா.சா.ஆ.1ல் சாட்சிகளின் தந்தை பெயர், முகவரி ஆகிய எந்த முழு விவரமும் இல்லை என்றால், சரியல்ல, இருக்கிறது.

4. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில், கடந்த 01.10.2018ல் பிரதிவாதி ரூ.8,00,000/–ஐ என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டதாக நான் குறிப்பிட்டுள்ளதற்கு ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால், இல்லை. பிரதிவாதி என்னிடம் ரூ.1,00,000/– கடன் வாங்கி அதனை மீண்டும் எனக்கு திருப்பி செலுத்திவிட்டார் என்றும், இந்த கடனுறுதி சீட்டை நான் தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனவே, இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால், சரியல்ல.

மறு விசாரணை :-இல்லை

முடிவு நேரம் 12.10 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.